# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1866/41 - 2014 ජූනි මස 13 වැනි සිකුරාදා - 2014.06.13

*1866/41 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணியானது தலவத்துகொடை நகர அபிவிருத்திச் செயல்திட்டத்திற்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது என கருதுவதனால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு ,*
*2014, மே 30.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகமை பிரதேச செயலக எல்லைகளுக்குள்ளான, தலவத்துகொடை கிராமத்தில் அமைந்துள்ளதும், 27.04.2014 என திகதியிடப்பட்டு, திரு. எச். நிலுபுல் ஆர். கருணாதிலக எனும் பதிவுசெய்யப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இலக்கம் 2690 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இலக்கங்கள் 1 மற்றும் 2 ஆனது 0.4838 ஹெக். (01ஏ. 00றூ. 31.30 பேர்ச்.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளன.*

*குறிப்பிட்ட காணிகளின் விபரங்கள் :-*

**காணித்துண்டு இல. 1: விஸ்தீரணம்: 0.0490 ஹெக்.**

வடக்கு : PPCo. 5516 இலான காணித்துண்டு இல. 14 மற்றும் பத்தரமுல்லை- பன்னிப்பிட்டி வீதி ;
கிழக்கு : பத்தரமுல்லை - பன்னிப்பிட்டி வீதி ;
தெற்கு : மதிப்பீட்டு இல. 708 இனைக் கொண்ட வளவு ;
மேற்கு : PPCo. 5516 இலான காணித்துண்டு இல. 14

**காணித்துண்டு இல. 2: விஸ்தீரணம்: 0.4348 ஹெக்.**

வடக்கு : மதிப்பீட்டு இல. 708 இனை பிரிக்கும் காண்;
கிழக்கு : பத்தரமுல்லை - பன்னிப்பிட்டி வீதி ;
தெற்கு : மாதிவெலை வீதி மற்றும் மதிப்பீட்டு இலக்கங்கள் 755, 755/1/1 மற்றும் 755/2/1 இனைக் கொண்ட வளவுகள் ;
மேற்கு : PPCo. 5516 இலான காணித்துண்டு இல. 14.

6- 831



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.